சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குழந்தைகள் நல காப்பகங்கள்.

*வினா எண் 19— திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை பாலர் பள்ளிகள் உள்ளன ?

(ஆ) அப்பகுதியில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு பாலர் பள்ளி தொடங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன். : (அ) சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் ஏழு குழந்தைகள் நல காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இல்லை.

தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள்.

*வினா எண் 20— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை மாவட்டங்களில் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன். : (அ) ஏற்கனவே தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் தஞ்சை, திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர். : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (* உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 11–20)

(3) அறிவிப்புகள்.

(அ) மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேட்வையில் (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த

1982 பிப்ரவரி 2]

(1) திரு. அ. ரகுமான்கான்,

(2) திரு. கே. குப்புசாமி,

(3) திரு இ. இராமசுப்பிரமணியன்,

(4) திரு. மெ. ஆண்டி அம்பலம்.

ஆகியோரின் பதவிக் காலம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாளுடன் முடிவடைந்து விட்டதால், பல்கலைக் கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதி முறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Pr po i nal ep esen a ion) இத்தேர்வு நடைபெறுவதில்லை. எனவே வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6 ஆம் நாள் சனிக்கிழமை மாலை 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 8 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 3–00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 3–00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் புதன் கிழமை காலை 9–00 மணிக்கும் பகல் 1–00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு—தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1) இன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை, இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :—

(1) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்,

(2) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்,

(3) திரு. துரைமுருகன்,

(4) திரு. இல. புலராமன்